(அ) செங்கம் தொகுதியில் ஜவ்வாது மலையிலுள்ள சந்தனத் தோப்புகளை மூலப்பொருளாக வைத்து சோப்புத்தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கம் தொகுதியில் சோப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள செங்கத்தில், நறுமணம் வீசுகின்ற சந்தன மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு சந்தன சோப்பு தயாரித்தால், மைசூர் சேண்டல் சோப்புக்கு இணையாக வருவாய் பெற தமிழக அரசுக்கு வாய்ப்பு உள்ளதால், அரசு இந்தத் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்த முன்வருமா, மீண்டும் இந்தத் திட்டத்தைப் பரிசிலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்புத் தொழிற்சாலை அமைப்பது என்னும் போது, அது சந்தனக் கட்டை கிடைப்பதைப் பொறுத்து அமைவதல்ல. குளியல் சோப்புக்கு சந்தன எண்ணெய் சிறிதளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இது போன்று சோப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் வைப்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 272, திரு பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

272—

குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி.

*5147 திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி துவங்க அரசு ஆவன செய்யுமா ?

1992 மார்ச் 19]

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே;

வேதாரண்யம் தொகுதியிலுள்ள குரவபுலம் கிராமம், அதனுடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏற்கெனவே கத்திரிபுலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி பகுதியில் அடங்கியிருக்கின்ற காரணத்தால் அங்கே புதிதாக வங்கி துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைக நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேள்வி நேரத்தின் போது இதுபோன்ற கேள்வியைக் கூட விவாதித்திருக்கிறோம். மற்ற கிராமங்களோடு இணைவதால் அதிக மக்கள் தொகை, அதாவது 10 ஆயிரம் 15 ஆயிரத் பேர் இருக்கின்ற அளவுக்கு ஒரு கூட்டுறவு வங்கி இருப்பதில் நியாயம் கிடையாது. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கோஷம் வலுவானதாகவும் செறிவூட்டப்பட்டதாகவும் இருக்கவேண்டுமென்றால் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி குறைந்தது 5,000 பேர் அல்லது 8,000 பேருக்கு ஒரு வங்கி என்ற நிலைமையை ஏற்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து சிந்திப்பார்களா என்பதை உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்ற வாரம் கேட்ட கேள்வியில் 20 ஆயிரம் பேருக்கு ஒரு வேளாண்மைக் கூட்டுறவுத் தொடக்க வங்கி துவங்கப்படுமா என்று கேட்டதற்கு 'முடியாது' என்று பதில் சொல்லியிருக்கிறேன். இப்போது கேட்கிற அந்த குரவபுலம் கிராமத்தில் 3484 பேர்தான் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு அங்கே ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி, அதிலே ரூ. 95,000 தவணை தவறிய கடன் இருக்கிறது. ஏற்கெனவே 1990–91-ல் அந்த வங்கி 92,000 ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS